# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/44 - 2024 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2024.05.10

*2383/44 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 94/47* (IX)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவினாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "கலல்பிட்டிய ஷேத்ராராம புராண விஹாரை புனிதப் பிரதேசம்" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான "கலல்பிட்டிய ஷேத்ராராம புராண விஹாரை புனிதப் பிரதேசத்துக்கான" உருவரைப் பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024, மே 09.*

## அட்டவணை

### கலல்பிட்டிய ஷேத்ராராம புராண விஹாரை புனிதப் பிரதேசத்தைக் கொண்ட காணி இடப்பரப்பு

மத்திய மாகாணத்தில், மாத்தளை நிருவாக மாவட்டத்திலுள்ள உக்குவெல பிரதேச செயலகப் பிரிவினுள் இல. E3457A கலல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவினுள் வருகின்ற கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும், "விஹாரகே வத்த மற்றும் போமலுவ வத்த" எனவழைக்கப்படுவதுமான காணியின் நில அளவையாளர் தலைமையதிபதியினது 2024, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதிய சுவட்டுத்திட்ட இல. MA/UKW/2024/90 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. A (1.1772) மற்றும் காணித்துண்டு இல. ட (0.2936) என்பவற்றை உள்ளடக்குகின்றதும், பரப்பளவில் 1.4708 ஹெக்டெயர்களைக் கொண்டுள்ளதுமானகாணியின் இடப்பரப்புக்கள் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இலக்கம்** A - விஹாரகே வத்த மற்றும் போமலுவ வத்த

வடக்கு : என். ஜீ. ட. செனவிரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் மடபுரேயாய, ஷேத்ராராம புராண விஹாரையினால் உரிமை கோரப்படும் எத்வல பஹுர, நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு இல. B, E மற்றும் F, என். ஜீ. சூலரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, கே. ஜீ. குணரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, டபிள்யூ. டபிள்யூ. இரத்னசூரிய என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, எஸ். ட. ஆர். மல்வென்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி மற்றும் ட. ஜீ. சந்திரசிறி என்பவரினால் உரிமை கோரப்படும் வெலெகெதரவத்த ;

கிழக்கு : என். ஜீ. சூலரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, கே. ஜீ. குணரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, டபிள்யூ. டபிள்யூ. இரத்னசூரிய என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி, எஸ். ட. ஆர். மல்வென்ன என்பவரினால் உரிமை கோரப்படும் ஒலியன்கேயின் நெற்காணி மற்றும் ட. ஜீ. சந்திரசிறி என்பவரினால் உரிமை கோரப்படும் தென்னரா பேல மற்றும் ஷேத்ராராம புராண விஹாரையினால் உரிமை கோரப்படும் திக் பேல ;

தெற்கு : டபிள்யூ. ஜீ. சந்திரசிறி என்பவரினால் உரிமை கோரப்படும் தென்னரா பேல மற்றும் ஷேத்ராராம புராண விஹாரையினால் உரிமை கோரப்படும் திக் பேல, நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு F, வீதி, எம். எம். அஷ்ரப் என்பவரினால் உரிமை கோரப்படும் தெல்கஹ லியத்த மற்றும் கால்வாய் ; அத்துடன் ;

மேற்கு : எம். எம். அஷ்ரப் என்பவரினால் உரிமை கோரப்படும் தெல்கஹ லியத்த, கால்வாய், என். ட. ஜீ. செனவிரத்ன என்பவரினால் உரிமை கோரப்படும் மடபுரேயாய மற்றும் ஷேத்ராராம புராண விஹாரையினால் உரிமை கோரப்படும் எத்வல பஹுர.

**காணித்துண்டு இலக்கம்** B - விஹாரகே வத்த மற்றும் போமலுவ வத்த

வடக்கு : H. P. 55887 இன் காணித்துண்டு இல. 2, வீதி, நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு C, D மற்றும் A ;

கிழக்கு : நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு C, D மற்றும் A ;

தெற்கு : நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு F மற்றும் A ; அத்துடன் ;

மேற்கு : நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவட்டுத்திட்ட MA/UKW/2024/90 என்பதன் காணித்துண்டு A, ஷேத்ராராம புராண விஹாரையினால் உரிமை கோரப்படும் எத்வல பஹுர மற்றும் H. P. 55887 இன் காணித்துண்டு இல. 2

EOG 05-0087

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.